www.tamilarangam.net

# கடற்புலிகள் 98

தமிழர் கடற் போரணியைப் பலப்படுத்துவோம்

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

இன்று தமிழ் மக்களின் விடுதலைக்கான - நீதிக்கான உரிமைப் போர் வரலாற்றின் முக்கிய காலகட்டம் ஊடாக நகர்கிறது.

தமிழர்களின் வாழ்வுக்கும் எதிர்காலத்திற்குமான தமிழீழம் இன்று பல்லாயிரம் சிங்கள இனவாத இராணுவத்தின் ஆக்கிரமிப்பினுள் உயிர்வாழப் போராடுகின்றது.

யாழ். குடா இராணுவ ஆக்கிரமிப்பின் கொடும்பிடிக்குள் அடிமைப்படுத்தப்பட்டு அல்லல்படுகின்றது. பல்லாயிரம் இராணுவத்தினர்; மூலைக்கு மூலை அமைக்கப்பட்ட சோதனைச்சாவடிகள்; காவலரண்கள்; செயற்கையான முறையில் மண்முட்டை அரண்களால் பிரிக்கப்பட்ட யாழ் புவியியல் அமைப்பு; தினசரி விதிக்கப்படும் புதிய இராணுவக் கெடுபிடிகள்; நூற்றுக்கணக்கில் தொடரும் பெண்கள் மீதான வன்முறை; காணாமல் போதல் என்ற பெயரில் பதியப்படும் சிங்கள இராணுவத்தின் படுகொலைகள்; இப்படியாய் வடபுலம் அல்லல்படுகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பு, சந்திரிகா அரசு தொடர்ச்சியாக தொடுக்கும் யுத்தத்தினால் இறப்புகளையும் இழப்புகளையும் எதிர்கொண்டு போராடுகின்றது. சிங்கள அரசின் 'வெற்றி நிச்சயம்' போர் நடவடிக்கை வன்னிப் பெருநிலப்பரப்பின் சமூக, பொருளாதார வாழ்வியல் அமைப்புக்களை குறி வைத்து நடத்தப்பட்டு வருகின்றது.

தென் தமிழீழம் சிங்கள அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளால் நாசமாக்கப்பட்டு வருகின்றது. போர் வெறியும் இனவெறியும் கொண்ட சிங்கள இனவாத அரசு தென்தமிழீழ நகரங்களை சின்னாபின்னப்படுத்த முயல்கையில் பொருளாதார தடை நடவடிக்கைகள் தென்தமிழீழத்தின் பாதிப்புக்களை இரட்டிப்பாக்குகின்றது. இவ் அடக்குமுறை ஆட்சி நடுவே தமிழர்களுக்கு உள்ள நம்பிக்கை, சுதந்திரமான பாதுகாப்பான தமிழீழம் என்னும் இலட்சியம் நோக்கிய விடுதலைப்போரே ஆகும்.

எமது ஆயுதம் தரித்த விடுதலைப் போர் எதிரியின் இனவெறி நடவடிக்கைகளை எதிர்கொண்டு போராடி தீர்க்கமாக வெற்றியை நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றது. பலம் பொருந்திய தமிழர் போர் அணிகள் உருவாக்கப்படுகின்றன. தமிழர்களின் அரசியல் இலட்சியம் சர்வதேச சமூகத்தின் அவதானத்தை ஈர்த்துள்ளது. பீரங்கிப் படையணிகள், விமான எதிர்ப்பு படையணிகள் எனப் பல்வேறு துறைசார்ந்த தமிழர் போர் அணிகள் எமது தரைப்படை அமைப்பில் பலம் பெற்றுவருகின்றன. ஆயினும் தமிழர்களது விடுதலைக்கான முழுமையான வெற்றி பலமான தகுந்த ஆயுதம் தரித்த தமிழர் கடற் போர் அணிகளின் கைகளிலும் தங்கியுள்ளது.

www.tamilarangam.net

இன்று எம்மை முற்றுகையிடும் எதிரியை நாம் முற்றுகை இட்டு அழிப்பதில்தான் எம் எதிர்கால வெற்றி தங்கியுள்ளது. நவீன ஆயுத தளபாடம் தரித்த பல்லாயிரம் துருப்பினரை முற்றுகையிட்டு அழிக்கும் பாரிய போர்ப் பணிக்கு எமது கடற் போரணிகள் காத்திரமான பங்கு வகிக்கவுள்ளன.

எமது கடல் பிராந்தியங்கள் எமது கைகளில் இருப்பின் எதிரியின் முதுகெலும்பு அதன்மூலம் உடைக்கப்படும். தனித்து எதிரி விமானங்களால் ஆக்கிரமிப்பு படைகளின் அனைத்து வழங்கல்களையும் மேற்கொள்வது முடியாத காரியம் மட்டுமல்ல சாத்தியமான காரியமுமல்ல. சிறீலங்கா கடற் படையே இப் பாரிய பணியை ஆக்கிரமிப்பு படைகளுக்கு புரிந்துவருகின்றது.

**அன்புள்ள பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களே,**

நாம் இன்று சிங்கள கடற்படைக்கு எதிராக முழுமையான உறுதியான ஒரு போரை பிரகடனப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். இஸ்ரேலிய சீன போர்ப்படகுகள், நவீனரக ஆயுதங்கள், மற்றும் கடற்போர் தளபாடங்களுடன் இயங்கும் ஒரு எதிரிப் படையை அழிக்கவேண்டிய - விரட்ட வேண்டிய போர்த் தேவை இன்று எழுந்துள்ளது.

நாமும் தகுந்த ஆயுத தளபாடங்களுடன் எமது கடல் பரப்பில் போரிட்டு சிங்களக் கடற்படையை விரட்டியடிக்க வேண்டும்.

1998 - இப் போர்த் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஒரு பூரண தமிழர் கடற்போரணிகள் உருவாக்கப்பட்ட ஆண்டாக அமைய வேண்டும். இதுவே தமிழர்களது வெற்றிக்கான பாதை திறப்பாகும்.

**நீங்கள் தீர்மானியுங்கள்**

எமது கடற்கரும்புலி காந்தருபன் தன் படகுகளில் வெடிகுண்டுகளைச் சுமந்து எதிரியின் போர்க் கப்பலை எட்டி உதைக்கையில் அவன் கண்ட கனவு விடுவிக்கப்பட்ட தமிழர் கடற்பரப்புக்களே; எம் கடல் அன்னை பிரசவித்த வீரப் பெண் கடற்கரும்புலி அங்கயற்கண்ணி எதிரிப்படையின் கட்டளைக் கப்பலை தகர்த்தபோது அவள் நிரூபித்ததும் அதனையே ஆகும்.

எம் வீரம்மிகு தலைமுறை தம்மை வெடிகுண்டுகளாக்கி எமது கடற்பரப்பில் யாகம் செய்கின்றனர். எமது கடலை மீட்க தமக்குத் தாமே தீ மூட்டுகின்றனர். தம்மை அழிக்கின்றனர்.

**நீங்கள் தீர்மானியுங்கள்**

இன்று கடற்புலிகளைப் பலப்படுத்தும் பாரிய தேவைக்காக உங்களிடம் வருகின்றோம். எம் தேசத்து கரங்கள் ஒவ்வொன்றும் இப்போர் நிதிக்கு உதவும் என நம்பிவருகின்றோம்.

தமிழர்களின் வெற்றி, தமிழர்களது எதிர்காலம் அனைத்துமே உங்களது பங்களிப்பில் தங்கியுள்ளது.

குண்டுவீச்சுக்கும் ஆக்கிரமிப்புக்கும் நடுவே ஓடி ஒழியும் எம் தேசத்து அவலங்களை முடிவிற்கு கொண்டுவர, நாம் எமது எதிரியை முற்றுகையிட்டு அழிப்போம் என போர்ச் சபதமேற்று எம் போர்நிதிக்கு உதவுங்கள்.

**எமது கடல் பிராந்தியம் எமக்கு மட்டுமே சொந்தமாகும்.**

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரெஞ்சுப் பணியகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்